**கவனிக்க.-** 15.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1764 - 2012 ජූනි මස 22 වැනි සිකුරාදා - 2012.06.22

*1764 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 762 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 764 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 770 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

இலங்கை புகையிரத சேவைகளின் 90 (ஏ)
தண்டவாளங்களுக்கான 4,000 சோடி மீன் தகடுகளை
கொள்வனவு செய்தல்

இலங்கை புகையிரத சேவைகளுக்கு 90(ஏ) தண்டவாளங்களுக்கான 4,000 சோடி மீன் தகடுகளை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் கோருகின்றார். உற்பத்தியாளர்கள் அவர்களின் விலைமனுக்களை அவர்களால் சான்றுபடுத்தப்பட்ட அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட முகவரொருவரினூடாக அல்லது நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2012.07.25 ஆந் திகதி இலங்கை நேரம் பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிப்புச் செய்யப்படாத ஆவணக் கட்டணமாகிய 2,000 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் பணமாற்றம் செய்யக்கூடிய சமமான பணத்தொகையை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகங்களில் அல்லது இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தையிலுள்ள புகையிரத சேவைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் செலுத்தி 2012.07.23 ஆந் திகதி இலங்கை நேரம் பி. ப. 3 மணிவரை பெற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள், அவைகளை மூடியவுடனேயே, இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகளின் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அத்தாட்சிபெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பதிவுத்தபாலில் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவும் ஒப்படைக்கப்படலாம் :-

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத சேவை தலைமை அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகளின் களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் அலுவலருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சிய அத்திட்சகர்,
புகையிரத சேவைகள் களஞ்சியசாலைத் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 94(11)2432044 அல்லது
94(11) 2436818.

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு (உயர்மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. : எஸ்.ஆர்.எஸ்./எப்.6944.

6-883

---

## இலங்கை புகையிரத சேவைகள்

88 இறாத்தல் பாரமுடைய இரயில் தண்டவாளங்களைப்
பதித்திருக்கும் பிரதேசத்திலுள்ள கொன்கிறீட் சிலீப்பர்களுக்கான
200,000 எண்ணிக்கையுள்ள RUBBER PAD களை கொள்வனவு
செய்தல்

88 இறாத்தல் பாரமுடைய இரயில் தண்டவாளங்களை பதித்திருக்கும் பிரதேசத்திலுள்ள கொன்கிறீட் சிலீப்பர்களுக்கான 200,000 எண்ணிக்கையான Rubber Pad களை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் உயர்மட்ட திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவிசாளர் கோருகின்றார்.

2. விலைமனுக்கள் 2012.07.23 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிப்புச் செய்யப்படாத ஆவணக் கட்டணமாகிய 2,500 ரூபாவை மாத்திரம் செலுத்தி 2012.07.20 ஆந் திகதி பி. ப. 3 மணிவரையிலும் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தையிலுள்ள புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் 2012.07.23 ஆந் திகதி பி. ப. 2 மணிக்கு கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தையிலுள்ள இலங்கை புகையிரத சேவைகள் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் மூடப்பட்டு அவைகளின் மூடும் நேரம் முடிந்தவுடனேயே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பின்வரும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக கையளிக்கப்படல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத சேவைகள் தலைமை அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

6. விலைமனுக் கோரல் ஆவணங்கள் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம். அத்துடன் மேலதிக தகவலுக்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சிய அத்திட்சகர்,
புகையிரத சேவைகள் களஞ்சிய திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 2432044 அல்லது 2436818.

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு (உயர்மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. : எஸ்.ஆர்.எஸ்./எப்.6945.

6-881

---

**இலங்கை புகையிரத சேவைகள்**

இரத்மலானை புகையிரத சேவைகளின் யார்ட்டில் (YARD) உள்ள 1120 மெ.தொ. உருக்கு/இரும்பு சீவல்களை அகற்றுதல்

இரத்மலானை புகையிரத சேவைகளின் யாட்டிலுள்ள 1120 மெ. தொ. உருக்கு/இரும்பு சீவல்களை அகற்றுவதற்காக கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சின் அமைச்சுக் கொள்வனவுக் குழுவின் தவிசாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

2. விலைமனுக்கள் 2012.06.22 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிப்புச் செய்யப்படாத ஆவணக் கட்டணமாகிய 10,000 ரூபாவை (பத்தாயிரம் ரூபாவை மாத்திரம்) புகையிரத சேவைகள் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் செலுத்திய பின்னர் 2012.06.21 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையிலும் கொழும்பு 10, புகையிரத சேவைகள் களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள், அவைகளை மூடியவுடனேயே, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படலாம் :-

தவிசாளர்,
அமைச்சு கொள்வனவுக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

6. விலைமனு ஆவணங்களை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தையிலுள்ள புகையிரத சேவைகளின் களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 2432044, 2436818 என்ற எண்களினூடாக கொழும்பு 10, ஒல்கட் மாவத்தையிலுள்ள புகையிரத சேவைகள் களஞ்சியசாலைகள் திணைக்களத்தின், புகையிரத சேவைகள் களஞ்சியசாலை அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளவும்.

தவிசாளர்,
அமைச்சு கொள்வனவுக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

தொடர்பு இல. : எஸ்.ஆர்.எஸ்./எப்.6943.

6-882

---

**இலங்கை புகையிரத சேவைகள்**

கொழும்பு முற்றவெளியிலுள்ள 1000 மெ. தொ. ஒதுக்கப்பட்ட வெகன்களை அப்புறப்படுத்தல்

கொழும்பு முற்றவெளியில் கிடைக்கத்தக்க 1000 மெ. தொ. ஒதுக்கப்பட்ட வெகன்களை அப்புறப்படுத்துவதற்கான முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கொழும்பு 10, இல. 1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, போக்குவரத்து அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

2. 2012.06.25 ஆந் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு விலைகூறல்கள் முடிவுக்கு வரும்.

3. கொழும்பு 10, புகையிரத சேவைகள் களஞ்சியங்களின் கண்காணிப்பாளரது அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியனவான படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2012.06.22 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 10,000 ரூபாவை (பத்தாயிரம் ரூபா மட்டும்) இலங்கைப் புகையிரதச் சேவைகள் தலைமைக் கணக்காளருக்குச் செலுத்துவதன் பேரில் இப்படிவங்களை மேற்படி அலுவலகத்திலிருந்து பெறமுடியும்.

4. விலைமனுக்கள், அவற்றுக்கான முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாகவே கொழும்பு 10, இல. 1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, போக்குவரத்து அமைச்சில் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் அங்கு சமுகமாய் இருக்குமாறு விலைகூறுநர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் வேண்டப்படுகிறார்கள்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும் :-

தவிசாளர்,
அமைச்சு கொள்வனவு குழு,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

6. விலைமனு ஆவணங்களை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சியங்களின் கண்காணிப்பாளரது அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

7. அத்துடன் மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத சேவைகள் களஞ்சியக் கண்காணிப்பாளர்,
புகையிரத சேவைகள் களஞ்சியங்கள்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 2432044, 2436818.

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

தொடர்பு இல. : எஸ்.ஆர்.எஸ்./எப்.6927.

6-884

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றத்திற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவிற்கமைவாக பின்வரும் கம்பனி பெயர் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

(1) கம்பனியின் பழைய பெயர் : அவிவா என் டி பி பைனான்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட்
(2) கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 313
(3) பதியப்பட்ட அலுவலக முகவரி : இல. 75, குமாரன் ரத்னம் வீதி, கொழும்பு 2
(4) கம்பனியின் புதிய பெயர் : அவிவா என் டி பி ஹோல்டிங்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட்
(5) பெயர் மாற்றப்பட்ட திகதி : 09.05.2012

திருமதி சத்துரி முனவீர,
கம்பனி செயலாளர்.

6-663

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

ஹெய்லீஸ் நெலுவ ஹய்ட்ரோ பவர் (பிறைவேட்) லிமிடெட் என்ற கம்பனி, 2012, ஏப்பிறல் 23 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஹெய்லீஸ் நெலுவ ஹய்ட்ரோ பவர் (பிறைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம் : பீவீ 85580
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2012, ஏப்பிறல் 23

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிடெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2012, மே 18.

6-656

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 ஆம் விதிகளுக்கமைய பீபள்ஸ் மெர்ச்சண்ட்ஸ் பீஎல்சீ தனது பெயரை பீபள்ஸ் மெர்ச்சண்ட்ஸ் பைனான்ஸ் பீஎல்சீ என 2012, மே 15 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு மாற்றிக்கொண்டுள்ளதென மேற்படி சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறியத்தரப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : பீபள்ஸ் மெர்ச்சண்ட்ஸ் பீஎல்சீ
கம்பனியின் புதிய பெயர் : பீபள்ஸ் மெர்ச்சண்ட்ஸ் பைனான்ஸ் பீஎல்சீ
கம்பனியின் இலக்கம் : பீகியூ 200
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 21, நவம் மாவத்தை, கொழும்பு 2

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிடெட்,
கம்பனி செயலாளர்கள்.

பீபள்ஸ் மெர்ச்சண்ட்ஸ் பைனான்ஸ் பீஎல்சீ.

6-682

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 8 ஆம் விதிகளுக்கமைய பீஎம்பி பைனான்சியல் சேவிசெஸ் லிமிட்டெட், தனது பெயரை பீஎம்பி சேவிசெஸ் லிமிட்டெட் என 2012, மே 24 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு மாற்றிக்கொண்டுள்ளதென மேற்படி சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறியத்தரப்படுகின்றது :-*

*கம்பனியின் பழைய பெயர்* : பீஎம்பி பைனான்சியல் சேவிசெஸ் லிமிட்டெட்
*கம்பனியின் புதிய பெயர்* : பீஎம்பி சேவிசெஸ் லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீபி 3648
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 21, நவம் மாவத்தை, கொழும்பு 2

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

பீஎம்பி சேவிசெஸ் லிமிட்டெட்.

6-683

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன்கீழ் பின்வரும் நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன :-*

*கம்பனியின் பெயர்* : க்ளோமக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : 86225
*முகவரி* : இல. 160, பூவேளிகட, வீமகஹகொட்டுவ, 20482
*திகதி* : 2012.05.28

பெயர் : ஹச் ஜே. ஏ. டபிள்யூ. இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம்: 86006
*முகவரி*: இல. 34 2/1 ஏ, டிவோஸ் எவனியு, கொழும்பு 04
*திகதி*: 2012.05.17

பெயர் : எக்றேறிய லைவ் ஸ்டோக் என் எஸ்டேட் மனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம்: 86014
*முகவரி*: இல. 167/ஏப் 1/1, கடவத்தை வீதி. நெடிமான, தெஹிவலை
*திகதி*: 2012.05.17

ஆர். ஜே. கன்சல்டிங்,
கம்பனிச் செயலாளர்.

6-704

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 (1) இன்கீழ் பின்வரும் நிறுவனங்கள் பதியப்பட்டுள்ளன :-*

பெயர் : பிலீட்டா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம்: பீவி 71285
*முகவரி*: இல. 955, 5ஈ2, ரோயல் கார்டென், ராஜகிரிய
*திகதி*: 2010.02.26

*கம்பனியின் பெயர்* : தெ நொலேஜ் கொங்க்லோமேரெட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 65287
*முகவரி* : தாஜ் சமுத்ரா ஒபீஸ் கம்ப்ளெக்ஸ், காலி வீதி, கொழும்பு 3
*திகதி* : 26.02.2010

*கம்பனியின் பெயர்* : டெக்9 இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 71345
*முகவரி* : இல. 108/ 28, மாளிகாகந்த வீதி, மருதானை, கொழும்பு 10
*திகதி* : 03.03.2010

ரிபாஸ் ஜெப்பார்,
கம்பனி செயலாளர்.

6-702

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : ஐ. ட்ரவெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 86232
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட திகதி* : 29.05.2012
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 651/35, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5

பினேன்சியெல் அன்ட் பிசினெஸ் அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

6-701

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

திஸ்ஸமஹாராமை, காசிங்கம பழைய தபால் அலுவலகத்தைச் சேர்ந்த நந்தா கலபத்தி ஆகிய நான், திஸ்ஸமஹாராமை பள்ளியவத்தை, இல. 10, 11 ஐச் சேர்ந்த வெல்லகே பிரேமலால் டீ சில்வா என்பவரிற்கு என்னால் வழங்கப்பட்ட, பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. காமினி ஆனந்த அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 01.11.2005 ஆந் திகதியிடப் பட்டு இல. 738 ஐக் கொண்டதும் 27.12.2005 ஆந் திகதிய நாட்பதிவேட்டு இல. 826 இன்கீழ் காலி அற்றோணித்தத்துவ பதிவேட்டின் தொகுதி இல. 48 இன் பக்கம் 6 இல் பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து இல்லாதொழிக்கிறேன் எனவும் சொல்லப்பட்ட எனது அற்றோணித் தத்துவக்காரர் வெல்லகே பிரேமலால் டீ சில்வா அவர்களால் இதன் பின்னர் புரியப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இலங்கை அரசிற்கும் இலங்கை பொது மக்களிற்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

நந்தா கலப்பத்தி.

6-681

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-*

*கம்பனி பெயர்* : ஜே எஸ் மெரிடைம் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 77469
*திகதி* : 2011, பெப்புருவரி 28
*முகவரி* : இல. 1/64, கலகொட றோட், பன்னிபிட்டிய

கம்பனி செயலாளர்.

தொலைபேசி இல. : 011-5742104.

6-734

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : லங்கா ஓபன்சொப்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 80473
*பதிவுத் திகதி* : 2011.08.04
*பதிவு முகவரி* : 1048/1, பொதுஅராவ, மாலபே

6-732

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : ட்ரான்ஸ்வேர்ல்ட் ஷிப்பிங் அன்ட் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 86214
*பதிவுத் திகதி* : 2012.05.28
*பதிவு முகவரி* : இல. 56/7, குருந்துவத்த வீதி, தலங்கம தெற்கு, பத்தரமுல்ல

சபையின் கட்டளைப் பிரகாரம்,

செக்ரடரீஸ் அன்ட் ரெஜிஸ்ட்ரார்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

6-728

---

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, குவாரி வீதி, இலக்கம் 241/4 இல் வசிக்கும் மாதரலியனகே ரிசட் லக்ஷ்மன் டி சில்வா ஆகிய என்னால் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு எஸ். ஈ. சுன்னதெனிய அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2009.10.08 ஆந் திகதியிடப்பட்ட உரிமைத்தத்துவ இல. 37 மூலம் திரு. வீரசிங்க ஆராச்சிகே பிரியந்த சிரிலால் என்பவருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் என்னால் இரத்துச்செய்யப்பட்டுள்ளது எனவும், ஆகவே இப்பொழுது தொடக்கம் எனது சார்பாக மேற்கூறப்பட்ட திரு. வீரசிங்க ஆராச்சிகே பிரியந்த சிரிலால் மூலமாக எடுக்கப்படுகின்ற எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதையும் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மாதரலியனகே ரிசட் லக்ஷ்மன் டி சில்வா.

6-739

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : சூப்பர் பாதுகாப்பு செயலாளர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 86072
*பதிவு முகவரி* : இல. 6, 2 ஆவது ஒழுங்கை, இரத்மலானை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012, மே 21

கம்பனி செயலாளர்கள்.

6-737

---

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப் படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : கோர்ட் ஆட்லவ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 85827
*பதிவு முகவரி* : இல. 527/2, தரனகம, தெல்கொடை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012.05.08

கம்பனி பணிப்பாளர்.

6-749

### கம்பனி பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நிமித்தம் பின்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : எப்5கொம்பியூட்டர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 85605
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2012.04.24
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : 1-1/2, டீ அல்விஸ் அவெனியூ, களுபோவிலை, தெஹிவளை

சீ. ஏ. எஸ். கோப்பரேட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

6-750

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் அறியத்தருவதாவது :-

*கம்பனியின் பெயர்* : பயர் ப்ளவர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 85987
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012, மே 24
*பதிவாக்கப்பட்ட கம்பனியின் முகவரி* : இல. 97ஏ, காலி வீதி, கொழும்பு 3

கம்பனி பணிப்பாளர்.

6-754/1

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் அறியத்தருவதாவது :-

*கம்பனியின் பெயர்* : டாக்டர் கோல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 85917
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012, மே 18
*பதிவாக்கப்பட்ட கம்பனியின் முகவரி* : இல. 186, ஹில் வீதி, தெஹிவளை

கம்பனி பணிப்பாளர்.

6-754/2

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் அறியத்தருவதாவது :-

*கம்பனியின் பெயர்* : த பவுன்டேஷன் போ சிவிலைசேசனல் ட்ரான்ஸ்போமேசன் அன்ட் கொன்சஸ் எவலூசன்
*கம்பனி இலக்கம்* : ஜீஏ 2641
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2011.12.20
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 267/25, காலி வீதி, கொழும்பு 3

கம்பனி பணிப்பாளர்.

6-754/3

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் அறியத்தருவதாவது :-

*கம்பனியின் பெயர்* : டெக்ஸ்டேஜ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 85479
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012.04.11
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 79, சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மாவத்தை, கொழும்பு 7

கம்பனி பணிப்பாளர்.

6-754/4

---

### கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கமைய பின்வரும் பொறுப்பு வரையறுத்த கம்பனி தனது பெயரை 2012.05.03 ஆந் திகதி முதல் மாற்றிக்கொண்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : ஈஸ்ட் சைட் ட்றேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 71166
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 516, பலுகஹாவெல்ல, கடுவெல்லெகம, 11526
*கம்பனியின் புதிய பெயர்* : எம்பொடி ட்றேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்

பிசினெஸ் ப்ரபஷனல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

லெவல் 4,
இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4,
2012.05.29.

6-756

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம் :-

கம்பனியின் பெயர் : எம் அன்ட் ஏ மோட்டர் ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 86230
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி : இல. 155/35, தொலலந்த கார்டன், தலவதுகொட
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2012, மே 29

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிசினெஸ் சொலுசன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

6-847

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : லங்காஸ்றர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 61257
பதிவுத் திகதி : 2007, செத்தெம்பர் 05
பதிவு முகவரி : 'குட் ஹோப்', இல. 5/4, 19 ஆவது ஒழுங்கை, கொழும்பு 3

டொட் எலன்,
பணிப்பாளர்,
லங்காஸ்ரர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்,

6-818

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2012.03.21 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஜென்டீல் டுவரிஸ்ட் லொட்ஜிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 85029
பதிவு முகவரி : இல. 38, ஸ்டேசன் வீதி, கல்கிசை

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

ஜென்டீல் டுவரிஸ்ட் லொட்ஜிங் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

6-816

---

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

ஹெகாப் வெலியூ எட்டட் ப்ரோடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனி 2012, மே 22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டததின் 9 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஹெகாப் வெலியூ எட்டட் ப்ரோடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 86095
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2012, மே 22

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2012, மே 28.

6-815

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தல் இத்தால் தருகிறோம் :-

கம்பனியின் பெயர் : திரி உதான (கரண்ட்டீ) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : ஜீஎல் 2175
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி : இல. 108/3-1/1, ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2012, யூன் 06

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிசினெஸ் சொலுசன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

6-846

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ரஷீ ஷிப்பிங் சேவிசெஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 85657

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 25-1/6, 1/7, நந்தா இன்வெஸ்ட்மென்ட் பில்டிங், அலெக்சன்ட்ரா பிளேஸ், கொழும்பு 7

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012.04.26

சுப்ரீம் மெனேஜ்மென்ட் சேவிசெஸ்,
கம்பனி செயலாளர்கள்.

6-842

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : ஸ்போர்ட்ஸ் வர்ல்ட் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 84298

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 97, எஸ். மஹிந்த மாவத்தை, மருதானை

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012.02.15

சுப்ரீம் மெனேஜ்மென்ட் சேவிசெஸ்,
கம்பனி செயலாளர்கள்.

6-843

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : அயிலன்ட் எகோ ஹொட்டெல்ஸ் என்ட் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 85197

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 60/20, எதிரிசிங்க வீதி, மிரிஹான, நுகேகொடை

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012.03.29

சுப்ரீம் மெனேஜ்மென்ட் சேவிசெஸ்,
கம்பனி செயலாளர்கள்.

6-841

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

பண்டாரகம, வெல்மில்ல, எலோத்தியாவ, த பினான்ஸ்வத்தை, 47 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கறவிட்ட விதானலாகே டொன் ஜனித் லசந்த ஆகிய நான், கொழும்பைச் சார்ந்த பிரசித்த நொத்தாரிசு ரி. சீ. ஜே. பீரிஸ் என்பவரினால் 246 என்ற இலக்கமும் 2003.06.13 ஆந் திகதியுமுடையதும், என்னால் பண்டாரகம, வெல்மில்ல, எலோதியாவ, த பினான்ஸ்வத்த 47 ஆம் இலக்கத்தைச் சார்ந்த சமந்தி சுஜீவனி விக்கிரமசிங்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லாதொழிக்கிறேன் என இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

அத்தோடு மேற்குறிப்பிட்ட இல்லாதொழிப்பு 2012, மே 22 ஆந் திகதியிலிருந்து செயல்வலு பெறுமென்பதையும் அத்திகதியிலிருந்து அவருடைய செயல்களுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்பட்டவரும் பொறுப்பாளியுமல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கறவிட்ட விதானலாகே டொன் ஜனித் லசந்த.

6-820

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இத்தால் சகலரும் அறிவதாவது,

இல. 7, 8 ஆவது ஒழுங்கை, கொழும்பு 3 இல் முன்பு வசித்தவரும் தற்போது மேரிலாண்ட் மாநிலம், மொன்ட்கோமெறி நாட்டில் வசிப்பவருமாகிய விவாகத்திற்கு முன்பு மெயராகிய மெய்வு வலரி மொய்றா அவுட்ஸ்கூன் ஆகிய நானும் காலஞ்சென்ற எனது கணவராகிய வைத்தியர் ஓப்ரி ஸ்ரெனிஸ்லஸ் அவுட்ஸ்கூனும் 1981 ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு மேர்வின் சென். செபஸ்தியன் காசிச்செட்டி முகதாவில் இல. 2525 இல் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் இல. 8, அல்பிறேட் ஹவுஸ் வீதி, கொழும்பு 3இல் வசிப்பவராகிய சம்சன் சேன விஜயசிங்க என்பவரை எனது சட்ட ரீதியான அற்றோணி தத்துவதாரராக நியமனம் செய்தேன். இன்றிலிருந்து குறிப்பிட்ட அற்றோணி தத்துவப் பத்திரத்தினை மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகின்றது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

மெய்வு வலரி மொய்றா அவுட்ஸ்கூன்,
கன்னிப்பெயர் மெய்யர்.

6-819

---

## பகிரங்க அறிவித்தல்

சுப்பர் பெல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
(கம்பனி இல. பீபி 754 பீவீ)

டோயோ குஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
(கம்பனி இல. பீவீ 5492)

ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு

பீபி 754 பீவீ என்ற கம்பனி இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சுப்பர் பெல்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டும் பீவீ 5492 என்ற கம்பனி இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட டோயோ குஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டும் அதிகாரச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கேற்ப ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்படும் என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் ("அதிகாரச் சட்டம்") 242(3)பீ பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனி டோயோ குஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்று அழைக்கப்படும். இந்த ஒருங்கிணைப்பு 2012, யூலை 12 ஆந் திகதியில் அல்லது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் திகதியில் நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியான டோயோ குஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை, ஒருங்கிணைக்கப்படும் கம்பனியொன்றின் எவரேனுமொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குநர் அல்லது உரிமையுள்ள எவரேனுமொருவர் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் உள்ள கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் வழமையான அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிடெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2012, யூன் 08.

6-813

---

**பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 242 ஆம் பிரிவிற்கு அமைவான ஒருங்கிணைப்பு

கெம்ப்ரொன் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
(கம்பனி இல. பீவீ 19101)

மெப்ரொக் டீஸ் (பிறைவேட்) லிமிடெட்
(கம்பனி இல. பீவீ 165)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் (“அதிகாரச் சட்டம்”) 244(3) ஆம் பிரிவிற்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது. கம்பனி இலக்கம் பீவீ 19101 இன்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கெம்ப்ரொன் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிடெட், கம்பனி இலக்கம் பீவீ 165 இன்கீழ் கூட்டிணைக்கப்பட்ட மெப்ரொக் டீஸ் (பிறைவேட்) லிமிடெட் என்பன அதிகாரச் சட்டத்தின் 242 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமய, மெப்ரொக் டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட இரு கம்பனிகளும் அதிகாரச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைய ஒருங்கிணைப்பு நடைமுறைகளைப் பூர்த்திசெய்துள்ளன.

அதிகாரச் சட்டத்தின் 244(1) (அ) பிரிவுக்கு அமைய, கம்பனிகள் பதிவாளர் நாயகம் 2012, மே 11 ஆந் திகதி ஒருங்கிணைப்புச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

ஹேலீஸ் குரூப் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிடெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2012, மே 28.

6-814

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : சினப்ஸ் சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 82830
பதிவு முகவரி : இல. 10/7டி, கிறீன்லாண்ட் ஒழுங்கை, இசிப்பத்தன வீதி, கொழும்பு 5

செயலாளர்.

6-703

---

# ஏல விற்பனைகள்

**செலான் வங்கி பீஎல்சீ – கறுவாத்தோட்டை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

(‘கடன்பட்டோர்’ என்ற வகையில் கொழும்பு 10 இல் பதிவு இல. என் (பி. வி. எஸ்.) 35065 ஐக் கொண்டுள்ள 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் ஒழுங்காக கூட்டமைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய பசுபிக் ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டிற்காக களனியைச் சேர்ந்த இந்திராணி குமாரி ஜெயகொடி முன்னாள் இந்திராணி குமாரி குலதுங்க மற்றும் ஜெயகொடி ஆராச்சிகே தயாரத்ன என்பவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)

**ஏல விற்பனை**

**மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கண்டி மாநகரசபை எல்லைக்குட்பட்ட புவெளிகட, லெவல்ல 13 ஆம் வட்டாரத்தில் வரிமதிப்பீட்டிலக்கம் 54, லெவல்ல வீதியில் அமைந்துள்ள கட்டிடம், மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் “ஹெதரவத்த” என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 1 அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. பி. வீரசேகர என்பவரால் தயாரிக்கப்பட்டு 1980.11.01 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1890 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ள துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ள காணித்துண்டு பதினெட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2012, யூலை 12 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- கண்டி மத்திய நகரத்திலிருந்து அனகாரிக தர்மபால மாவத்தை மற்றும் ஹெவஹெட்ட வீதியால் சுமார் 1 1/4 மைல் தூரம் பயணம் செய்து இடதுபக்கத்தில் குறுக்காக அமைந்துள்ள லெவல்ல வீதியில் சுமார் 2/3 மைல் தூரம் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலதுகை பக்கத்தில் அமைந்திருக்கும். இக்குறிக்கப்பட்ட சொத்து 1 கி. மீ. போஸ்ட்டிற்கு 50 யார் தொலைவின்முன் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2010.11.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2010.11.19 ஆந் திகதிய “டெயிலி மிரர்” மற்றும் “லங்காதீப” பத்திரிகைகளையும் 2010.11.23 ஆந் திகதிய “தினக்குரல்” பத்திரிகையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), (2) உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கும் மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகாரசபை வரி விதிகளுக்கமைய 1% (ஒரு வீதம்) உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்பட வேண்டும், (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., 'செலான் கோபுரம்', இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பார்வை யிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456482, 2456487.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 011-3068185, 011-2572940.

6-743

---

## செலான் வங்கி பீஎல்சீ – ஹொரக்கல கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*('கடன்பட்டோர்' என்ற வகையில் வெலிகமவைச் சேர்ந்த பெலஹெட்டி யாஹே அரின்ர சனத் குமார என்பவருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

### ஏல விற்பனை

**மாத்தறை மாவட்டத்தில் வரிமதிப்பீட்டிலக்கம் 450/6, மாத்தறை வீதி, வெலிகமவில் அமைந்துள்ள "ஹொம்பலவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். எல். கலப்பத்தி என்பவரால் தயாரிக்கப்பட்டு 1992.08.30 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4161 பதினெட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

**வழிமுறை உரிமை அதன் மீதும் அத்துடன் அதனூடாகவும் உள்ள விபரம் கீழ்வருமாறு :-**

**வரிமதிப்பீட்டிலக்கம் 450/6, மாத்தறை வீதி, வெலிகமவில் அமைந்துள்ள "ஹொம்பலவத்த" என்று அழைக்கப்படுகின்ற காணி மொத்த சொத்தின் துண்டு 15 இல் துண்டு பி இல் குறிப்பிடப்பட்டு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். எல். கலப்பத்தி என்பவரால் தயாரிக்கப்பட்டு 1992.08.30 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4161-எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

